உ

சிவமயம்

மூளாயூர் அமரர்கள் வயித்திலிங்கம்~செல்லம்மா

அவர்களின் அன்புமகன்

திரு. வயித்திலிங்கம் - சோதிலிங்கம்

அவர்களின்

நினைவுச்சுடர்

04-08-2001

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் - கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

சமர்ப்பணம்

தன்னலமற்ற தலைவா!

தாள்பணிந்து உமைப்போற்றி

கண்ணீர் சொரிய

காணிக்கையாக்குகின்றோம்.

இச்சுடரை - உம்

பாதமதிற் பணிந்து

மனைவி , மக்கள்

உ

அமரர் வயித்திலிங்கம் ~ சோதிலிங்கம்

தோற்றம்
05
-
08
-
1936

மறைவு
03
-
07
-
2001.

திதி வெண்பா

பேராளன் சோதிலிங்கம் பிறங்குவிஷு ஆனியதில்
சீரான திரயோ தசித்திதியில் - நேராகச்
சென்றடைந்தார் சிவலோகம் சிவன்தாள் சரணமென்று
நன்றிறிவார் யார்தான் இனி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

விநாயகர் வணக்கம்

ஓம் ஏகதந்தாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தன்னோ தந்தி பிரசோதயாத்//
ஓம் ஹ்ரீம் ஹ்ரிரீம் ஹ்ரிலிம் ஹ்ரிலம் ஹ்ரம்
கணபதே நமஹ.

தேவாரம்

நெஞ்சமுமக்கே யிடமாக வைத்தே
நினையா தொருபோது மிருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீர திகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

திருவாசகம்

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வேறிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம்பலத் தாடுந்
தலைவா என்பார் அவர் முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே.

திருவிசைப்பா

தன்னடி நிழற்கீழ் என்னையும் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
எழும்செழுஞ் சுடரினை அருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்கும் வெண்பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டு கொண்டேனே.

திருப்பல்லாண்டு

சேலும் கயலும் திளைக்கும் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கும்
என்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்து நின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

உச்சியின் மகுடமின்ன; ஒளிர்தர நுதலினோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரியவங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமாமுகம் கொண்டுற்ற
கச்சியின் விகட சக்கர கணபதிக் கன்பு செய்வாம்.

திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமாளே.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க-மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

கடவுளுக்கு மனிதன் கூறியநூல் - திருவாசகம்
மனிதனுக்கு கடவுள் கூறிய நூல் - கீதை
மனிதனுக்கு மனிதன் கூறிய நூல் - திருக்குறள்



திருமூலர் அருளிய அறங்கள்

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"
"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்"

"உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேனே"

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே."

"சிவசிவ என்ன சிவகதிதானே"

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்"

"காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடருற்றவாறே"
"கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்"

நற்சிந்தனை

யோகர் சுவாமிகள் அருளியது

ஏத்துக பொன்னடி

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீ றணிக
பழுதிலைந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட் டரற்றுக
அன்னை பிதாவின் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவா ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்க டம்மை
ஒருபோதும் மறவா துறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க
தன்னை அறிக தானே ஆகுக
மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனந்தள ரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக குறைவெலாந் தீர்க
ஈசன் அடியிணை ஏத்தி ஏத்தி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்தன் இவனென மண்ணவர் பேசவும்
சித்தன் இவனெனத் தேவர் கொண்டாடவும்
இவ்வண்ணம்:
ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை ஒன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமே.

எக்காலம்

அல்லும் பகலும் அப்பன் திருவடியைச்
சொல்லாமற் சொல்லிச் சுகம் பெறுவ தெக்காலம்

நில்லா வுலகையும் நிலையென வெண்ணிமனஞ்
செல்லாமல் திருவடியைச் சிந்திப்ப தெக்காலம்

காண்பான் காட்சியுங் காட்சிப் பொருளுமற்றுத்
தூண்போ லிருந்து சுகம் பெறுவ தெக்காலம்

பொன்னாசை மண்ணாசை பெண்ணா சையைநீக்கிப்
பொன்னார் திருவடியைப் போற்றுவது மெக்காலம்

வேதாந்தம் பேசி வீண்காலம் போக்காமல்
நாதாந்த மோனநிலை நண்ணுவது மெக்காலம்

எள்ளுக்கு ளெள்ணெய்போ லெங்கும் நிறைந்தவனைத்
தெள்ளுதமிழ் பாடிச் சேவிப்ப தெக்காலம்

ஆறாறு தத்துவத்துக் கப்பாலா யிப்பாலாய்
வேறாயுடனாய் நினைப்பதுவு மெக்காலம்

நினைவுக்கு நினைவாய் நிலைத்திருக்கும்மெய்ப் பொருளை
அனைத்துங் காரணனை யறிவதுவு மெக்காலம்

முனைத் துருவம் மூர்க்கக் குணமெலாம் நீக்கித்
தினைத்தனையும் மறவாமல் சேவிப்ப தெக்காலம்

பத்தும் படிப்போர்கள் கேட்போர்க ளெல்லாரும்
வித்தகன்றன் திருவடியை விரவி நிற்பர் நிச்சயமே.

கீதாசாரம்

நீ ஏன் அவசியமின்றிக் கவலைப்படுகின்றாய்?
யாருக்காக நீ பயப்படுகின்றாய்?
உன்னை யார் அழிக்க முடியும்?
ஆத்மாவிற்குப் பிறப்பும் இல்லை, இறப்புமில்லை
எது நடந்ததோ அது நன்மைக்காகவே நடந்தது
எது இப்போது நடந்து கொண்டிருக்கின்றதோ அதுவும்
நன்மைக்காகவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.
எது நடைபெற இருக்கின்றதோ அதுவும் நன்மைக்காகவே நன்றாக நடக்கும்
நடந்ததை எண்ணிக் கவலை கொள்ளாதே
நடப்பதைப் பற்றிச் சலனம் கொள்ளாதே
நீ எதை இழந்து விட்டாய் என்று இப்போ நீ அழுகின்றாய்?
நீ எதைக் கொண்டு வந்தாய் அதை இழந்துவிட
நீ எதை உருவாக்கினாய் அது அழிந்துபோக,
நீ எதையும் கொண்டு வரவில்லை.
உன்னிடம் இருப்பதெல்லாம் இங்கிருந்து பெற்றவை.
உனக்குக் கொடுக்கப்பட்டதெல்லாம்
இங்கிருந்து கொடுக்கப்பட்டவை.
நீ எடுத்துக் கொண்டதெல்லாம் இப்பிரபஞ்சம்
உனக்கு வழங்கியவை.
உன்னால் அளிக்கப்பட்டதெல்லாம்
இந்தப் பிரபஞ்சத்திற்காக அளிக்கப்பட்டவை.
வெறுங்கையோடு வந்தாய்,
வெறுங்கையோடு போகப் போகிறாய்
இன்று உன்னுடையது எதுவோ
அது நேற்று வேறொருவருடையது
நாளை மற்றொருவருடையதாகும்.
இது உன்னுடையது என்று நினைக்கின்றாய்.
இதனால் அதிக ஈடுபாடும் கொண்டுள்ளாய்.

ச.சிவகுமாரன்
அமுதசுரபி,
கட்டுடை, மானிப்பாய்.

சிவசோதியில் கலந்த சோதிலிங்கம் அவர்களின்

வாழ்க்கைவரலாறு

வதிரன்புலோ சித்தி விநாயகரின் அருள்சுரக்கப் பல வளங்களும், சோலைகளும், சாலைகளும், நிறைந்து பொலிவுடன் திகழ்வது மூளாய்க்கிராமம். கவிஞரால் ஏற்றமுறப் பாடும் தகைசால் சிறப்புக்கள் கொண்டது இக்கிராமம். இப்பெரும் பதியிலே பொற்புற வாழ்ந்தவர்கள் சின்னத்தம்பி தம்பதிகள். சின்னத்தம்பியின் தவப்புதல்வரே வயித்திலிங்கம். வயித்திலிங்கம் வல்லிபுரம் மகள் செல்லம்மாவை வதுவைசெய்து இல்லறமென்னும் நல்லறத்தில் இனிதுற வாழ்ந்தனர்.

இல்லற வாழ்வில் இனிய மக்கட்செல்வங்களாக இனியபுதல்வர்கள் எண்மர் தோன்றினர். நடேசலிங்கம்(அமரர்), செல்வலிங்கம், ஞானலிங்கம், வாமதேவி(அமரர்) சோதிலிங்கம், விமலாதேவி, கிருஷ்ணலிங்கம்(அமரர்), விஜயாதேவி ஆகிய ஐந்து ஆண்பிள்ளைகளும் மூன்று பெண் பிள்ளைகளும் பிறந்து வைத்திலிங்கம் தம்பதிகளுக்கு இல்லற வாழ்வை இன்புற வைத்தனர்.

இப்பிள்ளைகளில் கெஞ்சினாலும் கிடையாத ஐந்தாவது பிள்ளையே இவ்வரலாற்றின் நாயகனாகிய **சோதிலிங்கம்** அவர்கள். பெயருக்கேற்ற ஒளியும் பவளம்போன்ற மேனியும், பார்ப்பவரைக் கவரும் தோற்றமும் புன்சிரிப்பும் கொண்டவரே சோதிலிங்கம்.

சோதிலிங்கம் அவர்கள் 05-08-1936ம் ஆண்டு இம்மண்ணிற் தோன்றினார். "வாழும் பிள்ளையை மண்விளை யாட்டில் தெரியும்" என்று கூறுவார்கள். புத்திக்கூர்மையையும்,

புத்தூக்கவுணர்வையும் கண்ட பெற்றோர் இறும்பூதெய்தினர். கல்வி கேள்விகளில் வல்லவராக்கச் சோதிலிங்கம் அவர்களை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கற்கவைத்து, உயர்கல்வியைச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கற்கவைத்தனர். சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட புகழ்பூத்த விக்ரோறியாக்கல்லூரி அதிபர் சுப்பிரமணியம் அவர்களின் அன்புக்குப் பாத்திரமான சோதிலிங்கம், நல் மாணவனாகவும் கல்வி கேள்விகளில் வல்லவராகவும், விளையாட்டுத் துறையில் சிறந்த வீரனாகவும் யாவருடனும் தன் புன்சிரிப்பால் உள்ளங்கவர்ந்த அன்பனாகவும் திகழ்ந்ததோடு S.S.C பரீட்சையில் சித்திபெற்று H.S.C வகுப்பில் கற்கும் காலை, " உத்தியோகம் புருஷலட்சணம்" என்பதற்கிணங்க தொழிலுலகில் காலடி எடுத்துவைத்தார். முதலில் "வரகன்ஸ்" கட்டிட ஒப்பந்த நிறுவனத்திலும், பின்பு திசமஹாராம விவசாயப்பண்ணையிலும் தொழில்புரிந்தார். பின்னர் கொழும்பு "கிறிஸ்தொம்பு" (CHRISTOMBU) நிறுவனத்தில் இணைந்து முதலில் எழுதுவினைஞராகவும், முகாமையாளராகவும், இறுதியில் மேற்பார்வையாளராகவும் கடமை புரிந்தார். இதன் பின்பு "அற்லஸ் இன்ரர்நஷனல்" நிறுவனத்தில் நிர்வாக உத்தியோகஸ் தராகக் கடமை புரிந்தார்.

பதவியும், பணமும், புகழும் சேர்ந்த சோதிலிங்கம் அவர்கள் கண்கவர் காளை போன்று வாலிப நிலையில் மிளிரப்பெற்றார். கல்விவளம், செல்வ வளம்மிக்க மானிப்பாய் பதியில் வாழ்ந்த புகழ்பெற்ற சண்முகதாசன் - தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வியும் நுழைமான் நுண்ணறிவு பெற்றவரும் B.A., Dip. In.Ed. பட்டங்களைத் தாங்கியவரும் தற்பொழுது மூளாய் சைவப்பிரகாச வித்தயிாசாலை அதிபருமாகத் திகழ்கின்ற ரதிதேவிக்கு 27-08-1979ம் ஆண்டு திருமணம் செய்து வைத்தனர்.

இல்லற வாழ்வில் இணைந்த சோதிலிங்கம் - ரதிதேவி தம்பதிகள் கல்யாண வாழ்வு கற்கண்டாய் இனிக்க இரு ஆண்பிள்ளைகளைக் கண்டுகளித்தனர். இவர்களில் மூத்தவர் ஜனகன், (கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரி) இளையவர் விபுலன் (விக்ரோறியாக் கல்லூரி) உயர்தரவகுப்பு மாணவன்.

இவ்விரு பிள்ளைகளையும் கண்மணிபோல் காத்துப் பேணிவளர்த்து உயர்கல்வியோடு பட்டதாரிக்கல்வியையும் காணவேண்டுமென்று அவாவுற்று வந்தனர். இனிய வாழ்வு, நல்ல பதவி, உயர்வான வசதிகள், நல்ல பிள்ளைச் செல்வங்கள், பாடசாலைச்சூழலோடு அருமையான அன்பர்கள், நண்பர்கள் இவற்றையெல்லாம் பெற்று இனிதுற வாழ்ந்து வந்தார். அன்பர் வயித்திலிங்கம் சோதிலிங்கம் தன் உத்தியோகக் கடமையோடு சைவப்பணி, சமூகப்பணிகளில் நாட்டமுடையவர். தகப்பனாரினால் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகருக்குச் செய்துகொடுக்கப்பட்ட சிங்க வாகனத்தைச் செவ்வனே பராமரித்ததோடு அங்குள்ள வாகனசாலையையும் நன்கு பராமரித்துவந்தார்.

மேலும் நந்தவனப் பராமரிப்பிலும் ஈடுபாடுடையவர். வருடாவருடம் நடைபெறும் வருடப்பிறப்பு அபிஷேகத் திருவிழாவை அழகுறச் செய்வார். கோயில் திருப்பணி வேலைகளுக்கு முன்னின்று உழைத்தார். தன் மூதாதையரால் பரம்பரை பரம்பரையாகச் செய்துவந்ததும், தன் மாமனாரது திருவிழாவுமாகிய உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கொடியேற்றத் திருவிழாவைத் தானே முன்னின்று செய்வித்தார்.

சமயப்பணிகள்போல் சமூகப்பணிகளிலும் ஈடுபாடு உடையவர். மூளாய் இந்து இளைஞர் மன்றத்தில் உறுப்பி

னராகவிருந்து மன்றச் செயற்பாடுகளில் நாட்டம் காட்டினார். வெளிநாடுகளிலிருந்துவரும் அன்பர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதில் மிகமிக ஆர்வம் காட்டினார். பற்பல உதவிகளையும் செய்துதவினார். மூளாய் சைவப் பிரகாச பழைய மாணவர்சங்கக் கிளையைக் கொழும்பில் அமைத்து அதன் வளர்ச்சிக்குத் தன்னாலான சேவைகளை நல்கினார். அத்தோடு பாடசாலை விளையாட்டு மைதானம் வாங்கவும் முன்னின்றுழைத்தார்.

இ.ஃது இயமனுக்குப் பொறுக்கமுடியவில்லைப்போலும். என்னமோ காலன், களிப்போடு வாழ்ந்த சோதிலிங்கம் அவர்களை அதுவும் கொழும்பிலிருந்து மூளாய் வந்து திரும்பவும் கொழும்பிற்குத் தன் கடமைக்காகச் செல்லவிருந்த அன்புலிங்கத்தை அழைக்கமுயன்றான். **02-07-2001** அன்று அன்னாரது இன்னுயிரை இருதயநோய்மூலம் பறித்துச்சென்று இறைவனடி சேர்த்தான். இவ்வாறு சமயசமூகப்பணிகளில் மேலோங்கிய லிங்கம்! அன்பர்களின் அன்புலிங்கம்! இறை வனின் சோதியில் கலந்த சோதிலிங்கம்! இன்றில்லையே எனும்போது ஏக்கமும் மனத்தாக்கமும் எழுகின்றது. என் செய்வது? எல்லாம் விதிப்பயனே! படைத்தவனே அழைத்துக் கொண்டான் என்று ஆறுதல் கொள்வோம்! அமைதி பெறு வோம். அன்னாரின் ஆத்மா சாந்தி பெறுவதாக

இதய அஞ்சலி

ஆடித்திங்கள் மூன்றாம் நாள், காற்றோடு காற்றாய்க் கலந்துவந்த அத்துயரச் செய்தி எம்மை ஆட்டங்காண வைத்தது. "நேற்றிருந்தவர் இன்றில்லை" என்ற பெருமை இவ்வுலகுக்குண்டு என்ற உண்மை நாம் அறியாததல்ல. எனினும் எம்மட்டில் அது வரும்போது நம்மால் ஜீரணிக்க முடிவதில்லை. அன்று முழுவதும் ஓடியாடித் தன் கருமங்களைத் தானேயாற்றி, உற்றார் உறவினரைப் பார்த்துவந்து, உணவுண்டு உறங்கியவர் மறுநாள் அதிகாலையில் தன் கதையை முடித்துக்கொண்டு விண்ணேறியவிதம் யாரைத்தான் திகைக்க வைக்காது. பலமாதங்களாக ஊருக்குப் போகாதவர், திடீரென்று ஊருக்குப் போகவேண்டும் என்ற உணர்வு தோன்றுவதாகக் கூறிவந்து, தன்னூரில், தன்னில்லத்தில், தன் மனைவி மக்களிடம் விடைபெற்றுச் சென்ற அவர்தம் ஆத்மசக்தியை என்னென்பது! அமரர் சோதிலிங்கம், தனக்கென வாழ்ந்தவரல்லர். அவரிடம் தமர் பிறர் என்று பேதமில்லை. இன்னார் இனியார் என்ற வேறுபாடில்லை. உற்றார் உறவினரின் சுகதுக்கங்களைத் தமதாக்கித் தொழிற்படுவது அவருடைய பெரும் பண்பு. அவர் ஒரு சுமைதாங்கி. தம் சகோதரர் மைத்துனர் அவர்தம் பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர் யாபேருடைய தேவைகளையும் சுமந்து செயற்பட்டவர். "நடுவூர் பழுத்த பழமரம்போல் " அவர் பணி யாருக்கும் பயன்பட்டது. இன்று அந்த உதவும் கரத்தை இழந்த யாபேரும் கதிகலங்குகின்றனர்.

எமது குடும்பத்திற்குச் சோதி வலது கரமாக அமைந்தவர். அவரின் உதவியை இழந்த நாம் தவிக்கின்றோம். கொழும்பில் நாம் தனித்து நோய்வாய்ப்பட்டு இருக்கும்போது "நானிருக்க ஏது பயம்" என்று எமக்கு உரமூட்டி எம் தேவைகளையெல்லாம் நிறைவேற்றிவைத்தார். பிரதி ஞாயிறுதோறும் தம் ஓய்வு நாட்களில் இல்லம் வந்து அன்றைய எம் தேவைகளை நிறைவேற்றி, ஆறுதல்தந்த அந்த அன்புள் ளத்தை நாமின்று இழந்து நிற்கின்றோம். நாளொன்றிற்கொரு தொலைபேசி அழைப்பாவது அவரிடமிருந்து வராமல்போகாது. ''என்னசெய்கிறீர்கள்? எப்படிஇருக்கிறீர்கள்? என்ன தேவை? " என்பதே அவ்வழைப்பின் அடக்கம். எம்மகனின் திருமணத்தின்போது தானே முன்வந்து

லண்டன் மாநகரம் சென்று மணவிழாவிற் கலந்து சிறப்பித்தமை எம்பிள்ளைகளை மிகவும் குளிர்வித்தது. தன்பிள்ளை, பிறர்பிள்ளை என்ற பேதமின்றி எல்லோரிலும் அன்பு பாராட்டி அவர்கள் வளர்ச்சியிற் கருத்தாக விருந்தார்.

பாசமிகு நல்லுறவே! உம் அன்புள்ளம் எம்மீது காட்டிய கரிசனை எம் ஒவ்வொருவர்மீதும் கொண்டிருந்த பரிவு, எம்நலனில் கொண்ட அக்கறை, எம் குறையறிந்து நிறைவு செய்த பொறுப்பான பணி இவை என்றென்றும் எம்மால் மறக்கமுடியாது அழிக்கமுடியாது நீக்கமுடியாது.

''புரந்தார் கண்ணீர் மல்கச் சாகின் பின் சாக்காடு
இரந்து தோள்தக்க துடைத்து ''

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க இறப்பிலும் பெருமை கண்டவர் அமரர் சோதிலிங்கம். தம்மவர் தம்மைச் சூழவுள்ளவர், தம்மால் ஆதரிக்கப்பட்டோர், உற்றார், உறவினர் யாபேரினதும் கண்ணீரைத் தாங்கிக் கொண்டல்லவா அவருடைய இறுதி யாத்திரை நிறைவு பெற்றது.

''பிறப்புண்டேல் இறப்புண்டு '' இவை யாவும்
'' எப்பவோ முடிந்த காரியம் '' ''யாம் ஒன்றும் அறியோம்''

என்ற பெரியோர் வாக்கை நினைவு கூர்ந்து எம்மைச் சமாதானப்படுத்துவோமாக! அவர்தம் ஆத்மா ஐந்து கரத்து ஆனைமுகத்து இறைவனின் திருப்பாதங்களில் சங்க மித்துச் சாந்திபெறப் பிரார்த்திப்போமாக!

சகோதரன்
ஞானலிங்கமும் குடும்பமும்

மனித வாழ்வில் நேற்றிருந்தவர் இன்றில்லை!

இரங்கற் செய்தி

மனிதன் பிறக்கின்றான் .....
மனிதன் வாழ்கின்றான் .....
மனிதன் இறக்கின்றான் .....

இவை அனைத்தும் இறைநியதிப்படி இக்கலியுகத்திற் சாதாரணமாக நிகழ்கின்ற நிகழ்வுகள். பிறந்த மனிதன் தான் வாழும் காலத்திலே தனக்குரிய பெற்றோருக்கு எதைச் செய்தான். பின்னர் இல்லற வாழ்வில் நுழைந்து குடும்பத்தாருக்காக எதைச் செய்தான் தான் வாழும் சமூகத்திற்கு எதைச் செய்தான். என்பதனையே இவ்வுலகம் சீரதூக்கிப் பார்க்கும். அந்த மட்டில் எங்கள் "அற்லஸ்" தனியார் ஸ்தாபனத்தில் மூன்று வருடங்களுக்கு மேலாக இத்தாபனத்தில் கடமை, கண்ணியம், கட்டுக்கோப்போடு தலைமை நிர்வாகத்தின் கட்டமைப்புக்கு அமையக் கொழும்பில் எமது தாபனத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிவந்த பெருமைக்குரியவர். அமரர் திரு. வயித்திலிங்கம் சோதிலிங்கம் அவர்கள் உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இனிய துணைவியார் மூளாயில் அறிவாற்றல்மிக்க பாடசாலை அதிபர்.

எனது தாபனத்தைச் சர்வ சாதாரணமாக ஒருவரால் நிர்வகிக்க முடியாது. அதற்கு முற்றும் பொருத்தமாக ஐயா அவர்கள் எமக்கு வந்துகிடைத்தது. இறையருட்கொடை எனவே கருதுகின்றோம். "செய்யும் தொழிலே தெய்வம்" என நிறைந்த இறைபக்தியுடன் இத்தாபனத்தை நிர்வகித்து நின்றார். இங்கு கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுடனும் மிக அன்பாகப் பழகினார். ஆனால் கண்டிப்புக்குரியவராக நேர்மையுடன் நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தி வந்தார்.

இங்கு வரும் வாடிக்கையாளர்களுடன் அன்போடும் பண்போடும் பழகி அவர்கள் மூலமாக இன்னும் அநேக வாடிக்கையாளர களைப் பெற்றுக் கொண்டார். இவரது கடமை உணர்ச்சி நிர்வாகத்தால் மிகவும் கவரப்பட்டதொன்றாகும்.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த உத்தமர். யாழ் சென்ற ஐயா எம்மிடம் திரும்பவும் வருவாரெனக் காத்திருந்தோம். ஆனால் அவர்தம் மரணச்செய்தியே எமக்கு வந்துகிட்டியது. "எப்பவோ முடிந்த காரியம்" "ஒரு பொல்லாப்பும் இல்லை" எனும் ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகள் வாக்குத் தான் எமக்கு ஆறுதலையும் தேறுதலையும் தரும்.

ஜீரணிக்க முடியாத ஐயாவின் பேரிழப்பு அதிர்ச்சி யிலிருந்து இன்னும் நாங்கள் மீளவில்லை. எமக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. அன்னாரின் பிரிவுத்துயரால் ஆறாத் துயரக் கடலில் மூழ்கிநிற்கும் அருமைத் துணைவியார், மக்கள், சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் பணிவுடன் எமது அனுதாபங்களைக் கூறி ஐயா அவர்கள் தம் நிலைய நித்திய ஆத்ம சாந்திக்காக கண்ணீரோடு இறைவனை இருகரமேந்திப் பிரார்த்திக்கின்றோம்.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு''

– பெருநாவலர் வள்ளுவர் –

அற்லஸ் இன்ரனஷனல்
227, மத்தியவீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல:-431498

ந.பாலேந்திரன் குடும்பத்தார்.
(நிர்வாக அதிபர், அற்லஸ் இன்ரனஷனல் பிறைவேற் லிமிட்டெட்)
மற்றும் உத்தியோகத்தர்கள்

தோன்றாத் துணையாய பெருந்தகை

நிமிர்ந்த நடையும் மலர்ந்த முகமும் எவருடனும் சரளமாக அன்பாகப்பழகும் இனிமை உள்ளமும் கொண்ட அமரர் சோதிலிங்கம் அவர்களை எமது வித்தியாலயம் இழந்து கலங்கி நிற்கின்றது. எம் வித்தியாலயத்தின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் அமரரின் பங்குண்டு என்பது மறக்கமுடியாத உண்மையாகும்.

தம் மூளாயூருக்கு விடுமுறையில் வரும்போதெல்லாம் எம் வித்தியாலயத்திற்கு வந்து அங்கு சீர்செய்யப்படவேண்டிய வளங்களையும் அதற்கான வழிவகைகளையும்பற்றி உரிய ஆலோசனை வழங்குவது வழமையானதாகும். இன்று எமது பழைய மாணவர் சங்கத்தின்கிளை கொழும்பில் உருவாகி இயங்கவும் அதன் பயனாக எம் வித்தியாலயம் விளையாட்டு மைதானம் பெற்று விளையாட்டுத் துறையில் மேலோங்கவும், குழாய்க்கிணறு அமைத்து நீர்த்தேவை பூர்த்தி செய்யப்படவும் முடியுமென்றால் அதற்கு வித்திட்ட எம் அமரர் சோதிலிங்கம் அவர்களை நன்றியுடன் நினைவுகூராதிருக்க முடியுமா?

எம் வித்தியாலயத்திற்குத் தேவையான வளங்களைக் கொழும்பிலிருந்து நாம் இலகுவாகவும் மலிவாகவும் தரமாகவும் பெறுவதற்கு வாங்கி அனுப்பிவைக்க இனி எமக்கு யாருளர்?

இன்னும் எமது வித்தியாலயம் வளம் பெறுவதற்கு இம் முறையும் இங்கு வந்தபோது தம் முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளை எம்மிடமிருந்து பிரிந்துவிட்ட அன்னாரின் ஆத்மா சாந்திய டையவும் அன்னாரின் பேரிழப்பால் தவிக்கும் எம் அன்னையொத்த அதிபரும் அவர்தம் பிள்ளைகளும் குடும்பத்தினரும் மனஆறுதல் பெறவும் இறைவனைப் பணிந்து வேண்டுகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்,
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

கண்ணீர் அஞ்சலி

மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.சோதிலிங்கம் அவர்களின் திடீர்மறைவு எல்லோருக்கும் அதிர்ச்சியையும் கவலை யையும் ஏற்படுத்திய ஒரு சம்பவம். விடுமுறையைத் தனது மனைவி பிள்ளைகளுடன் சந்தோஷமாகக் களிப்பதற்காகக் கொழும்பிலிருந்து வந்தவருக்கு எல்லோருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அவரின் மறைவு அமைந்துவிட்டது. அன்னாரைப் பாடசாலை மாண வனாக பல ஆண்டுகாலங்களுக்கு முன்பிருந்தே எனக்குத் தெரியும். எம்மிலும் மூத்த மாணவனாக யா/விக்ரோறியாக் கல்லூரியில் கல்வி கற்றவர். மாணவ பருவத்தில் எல்லோருடனும் கலகலப்பாகப் பழகும் சுபாவம் உள்ளவர். கல்வியை முடித்துக் கொண்டு கொழும்பில் தனியார் நிறுவனத்தில் கடமையாற்றியதாக நான் அறிவேன். அவர் பின்னர் தற்போதைய யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராகிய திருமதி ரதிதேவியை மணம முடித்து இரு ஆண்பிள்ளைகளுக்குத் தந்தையாக விளங்கினார். கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் மனைவி கிராம சேவை உத்தியோகத்தர் திரு.சிவகுமாரன் அவர்களின் சகோதரி ஆவார். திரு.சோதிலிங்கம் அவர்கள் பாடசாலையில் ஒரு சிறந்த மாணவனாகவும் நல்ல விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்தவர். தனது கிராமத்துக்குத் தன்னாலான உதவிகளைச் செய்துவந்தவர். மூளாய்ப்பிள்ளையார் கோவில் திருப்பணி வேலைகளுக்கும் மற்றும் பூந்தோட்டம் அமைக்கும் பணிக்கும் பல உதவிகள் புரிந்து தனது சமயப் பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார். மனைவியின் கல்விப்பணி சிறந்து விளங்க நல்ல ஒத்தாசை புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

திருமதி சோதிலிங்கம் அவர்கள் மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபர் பொறுப்பை எடுத்த பின்னர் அப்பாடசாலை பல வழிகளிலும் முன்னேற்றமடைந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் அவரின் துணைவியார் பல்வேறு சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருவதையும் அவர் கூட்டுறவுத் துறைக்குச் சேவையாற்றி வருவதையும் காணக்கூடிய தாயுள்ளது. அன்னாரின் பிள்ளைகளும் நல்ல முறையில் கல்விகற்று வருவதையும் சிறந்த மாணாக்கர்களாகத் திகழ்வதையும் விளையாட்டுத்துறையில் பிரகாசித்து வருவதையும் காணக்கூடியதாயுள்ளது. மறைந்த திரு.சோதிலிங்கம் அவர்களின் திடீர்மரணம் அவரின் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. அமரர் அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கா.சந்திரராசா
இளைப்பாறிய பிரதேச செயலர்
சங்கானை.

பண்புடைத் தொண்டன்

மூளாய் விநாயகப் பெருமானையும் முருகக்கடவுளையும் வழிபட்டு வாழ்ந்துவரும் அவ்வூர் வாசியான பெரியார் வைத்திலிங்கம் சோதிலிங்கம் அவர்கள் பெருவாழ்வு வாழ்ந்தவர். திடீரென இவரது மரணம் சம்பவித்ததை அறிந்து அதிர்ச்சியுற்றேன்.

கொழும்பில் தொழில்புரிந்து வந்தவர். விக்ரோறியாக் கல்லூரியில் நான் கல்வி பயின்ற காலத்தில் மேல் வகுப்பில் பயின்றவர். எனது பாடசாலைக் காலம் முதல் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர். எவரையும் எங்கு கண்டாலும் புன்முறுவலுடன் அன்பு ததும்பும் வார்த்தைகளைப் பேசிச் சுகம் விசாரிப்பது அவரது பெரும் பண்பு.

இப்பேராளன் தனது துணைவியார் அதிபராகப் பதவி வகிப்பதும் தன் ஆரம்பக்கல்வியைக் கற்றதுமான யா/மூளாய் சைவப்பிரகாசவித்தியாலையின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத் திக்கும் தனது முழுச்சக்தியையும் செலவு செய்து பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். தொடர்ந்தும் பல திட்டங் களைத் தீட்டிச் செயற்படுத்தும் நோக்கில் கொழும்பிலிருந்து ஊருக்கு வந்தவரை விதி விளையாடிவிட்டது.

தனது மனைவி மக்களுடன் இருந்து உயிர்பிரியும் போது அவருக்கு ஆறுதலும் குடும்பத்தினருக்குத் துயர்தாங்க முடியாத நிலையும் ஏற்பட்டுவிட்டது.

மனிதனது பிறப்பிலிருந்து இறப்புவரை செய்கின்ற புண்ணிய பாவங்களை அவனது இறுதிக் காலத்திலேயே எம்மால் அறிய முடிகின்றது. இந்த வகையில் இவர் ஒரு பண்புடைத் தொண்டன் என்றே நான் கூறுவேன்.

"உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"
"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத் திவ்வுலகு.

இவ்வள்ளுவர் வாக்கினை நினைந்து நாமும் இவரைப் போன்ற தொண்டர்களாக இருந்து இவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சங்கீதபூஷணம் சு.கணபதிபிள்ளை
(ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர்)
பொன்னாலைக்கோவிலடி, சுழிபுரம்.

பசுமை மாறவில்லை..
பண்பாளர் மறைந்துவிட்டார்

அன்பிற்கும் நன்மதிப்பிற்குமுரிய சோதிலிங்கம் அவர்களின் இறப்புச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். கடைசியாக அவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் பயணம் செய்தபோது அவரை இரட்மலான விமானநிலையத்தில் சந்தித்துப் பயணம் முழுவதும் ஆரோக்கிய நிலையில்பல விடயங்களைச் சிரித்தும் மகிழ்ச்சித்தும் கதைத்த காட்சி எனது மனதில் இன்னும் பசுமையாகத் தெரிகின்றது.

இவர் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இனியகுணம் நிறைந்துவிளங்கி எல்லோருடைய நன்மதிப்பிற்கும் உரியவரானார். மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையில் அங்கத்தவராக இருந்து பாடசாலை முன்னேற்றத்திற்கு உதவுவதற்குப் பெரும் பாடுபட்டார். திருமதி. ரதிதேவி சோதிலிங்கம் மூளாய் சைவப்பிரகாச வித்தியா சாலை அதிபராகவும், யாழ்மாவட்டக் கூட்டுறவுப் பெண்கள் அமைப்பின் தலைவியாகவும் மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலைய அங்கத்தவராகவும் இருந்து சேவைகள் பல ஆற்றுகின்றார்.

இவரின் உயர்விற்கு உறுதுணையாக நின்ற பெருமை அமரர் சோதிலிங்கத்தைச் சாரும். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் உறுப்பினர் நண்பர்களுடன் நானும் எனது கணவரும் கவலைகளைப் பகிர்ந்து கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

திருமதி இ. பொன்மலர்
சிறுவர் பாடசாலை ஆசிரியர்
பயிற்சி நிலையம்,
(I.N.S.)
மூளாய், சுழிபுரம்.

சோதியாகிவிட்ட சோதிலிங்கம்

அமரர் வைத்திலிங்கம் - சோதிலிங்கம் அவர்களை எனது சிறு பராயத்திலிருந்தே நான் அறிவேன். யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் சிறந்த விளையாட்டு வீரனாகவும் பல்துறை ஆற்றலும் உயர்ந்த ஆளுமையும் நிறைந்தவராக விளங்கியவர். தன் தோற்றத்தாலும் செயற்பாடுகளாலும் எவரையும் தன்பான் கவர்ந்திளுக்கும் திறமை உடையவர். வர்த்தக நுணுக்கங்களை நன்கறிந்து கொண்டதுடன் வாக்குச் சாதுரியத்தால் எவ்வேலையையும் இலகுவில் செய்துமுடிக்கும் செயற்திறனாளனாக விளங்கினார். இதனால் தனது தனிப்பட்ட வாழ்விலும் தனது தொழில் ஸ்தாபனங்களிலும் அரிய சாதனைகளைப் புரிந்ததுடன் வேறு பல நாடுகளுக்கும் சென்று பல அனுபவங்களைப் பெற்றுச் சமூக முன்னேற்றச் செயற்பாடுகளில் பூரண பங்களிப்பை வழங்கிய சமூக சேவகரானார்.

அன்னாரின் வாழ்க்கைத் துணைவியாக அமைந்தவர் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்க செயலாளராக இருந்த கட்டுடை திரு.சண்முகதாஸன் அவர்களின் மகள் ரதிதேவி ஆவார். திரு. சண்முகதாஸன் அவர்கள் பெரும் கல்விமான் - புகழ்பூத்த அதிபர்களில் ஒருவர். அவரது மகளும் தந்தைவழிசென்று ஆசிரியப் பணியேற்று இன்று எமது பிரதேசத்தில் முன்னணிப் பாடசாலைகள் வரிசையில் நிற்கும் யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையை முன்னெடுத்துச் செல்லும் முதன்மை முகாமையாளரான அதிபர் பதவியை வகித்துவருகிறார். இவ்வித்தியாசாலை கல்வி அபிவிருத்தியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல சாதனை களைப் புரிந்து வருகின்றது. இத்தகைய முன்னேற்றத்தை இவ்வித்தியாசாலை காண்பதற்குத் திருமதி **ரதிதேவி-சோதிலிங்கம்** அவர்களின் அர்ப்பணிப்பான சேவையே காரணமாகும். சிறந்த சமூக சேவகியான திருமதி ரதிதேவி சோதிலிங்கம் அவர்கள் சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளை

மக்களுக்கிடை யேயுள்ள குறைபாடுகளைக் கேட்டறிந்து சுமூகமாகத் தீர்த்து வைக்கும் வல்லமை உடையவராக விளங்குகின்றார். யாழ் மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுத்தலைவியாகச் செயற்படும் திருமதி ர.சோதிலிங்கம் அவர்கள் கூட்டுறவுத் துறைக்கு ஆற்றி வரும் அளப்பரிய சேவை என்றும் பாராட்டுக்குரியது.

திருமதி .ரதிதேவி - சோதிலிங்கம் அவர்கள் பலதுறை களிலும் பிரகாசிப்பதற்கு ஜோதியாக நின்று வழிகாட்டியவர். திரு.சோதிலிங்கம் என்றால் மிகையாகாது. திரு.சோதிலிங்கம் தனது துணைவியை சமநிலையில் மதித்து அவரது பணிகள் மேன்மை பெறவேண்டும் என்பதற்காக ஆக்கமும் ஊக்கமும் ஒத்துழைப்பும் கொடுத்துப் பெண்மையைப் போற்றி மதிக்கும் சான்றோனாக விளங்கினார். அதனால் அவரின் பாரியார் சமூகத்தில் முதன்நிலையில் மதிக்கப்படுகின்றார்.

பிறப்பும் இறப்பும் வாழ்வின் நியதி. ஒருவரது இறப்பு பெரும் இழப்பாக ஏற்கப்படுவதற்கு அவரது தனிப்பட்ட வாழ் விலும் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் பல சாதனை களைச் சாதித்தவராக இருக்க வேண்டும். அத்தகைய நிலை யில் அமரர் சோதிலிங்கத்தின் வாழ்க்கையைச் சீர்தூக்கிப் பார்க்கையில் நிறைவான வாழ்க்கை வாழ்ந்த இப்பெரியாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும். தன் வாழ்நாளில் அன்னார் நிறைவு செய்த நற்பணிகள் சோதியாக நின்று அவரது அருமைத்துணைவி திருமதி ரதிதேவி அவர்களையும் அன்புச் செல்வங்கள் ஜனகன், விபுலன் ஆகியோரையும் வாழ வைக்கும் என்பதில் ஐயமில்லை. நிறைவு செய்யக் காத்திருந்து அவரது எஞ்சிய இலட்சியப் பணிகளை அவரது பாரியாரும் மைந்தர் களும் நிறைவேற்றுவார்களா? அவரது ஆத்மா சாந்தியடைக

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கார்த்திகேசு நடராஜா

அதிபர்.

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

அன்பன் சோதிலிங்கம்

மூவேந்தரால் கட்டிக் காத்த தமிழ், முச்சங்கத்தால் உயர்ந்த தமிழ் மூளாயில் முனைப்போடு வளரும் தமிழ் இத்தமிழ்க்குடியில் உயர்ந்தவரே வயித்திலிங்கம் சோதிலிங்கம்.

விக்ரோறியாக் கல்லூரியில் யான் கற்கும்காலம் எங்கட்கு மூன்று வகுப்புக்களுக்கு முன்பாகக் கற்றவரே அன்பர் சோதிலிங்கம். எடுப்பான தோற்றம். நிமிர்ந்த நோக்கு, சீர்கொண்ட பார்வை, புன்சிரிப்பு, யாரிடமும் பழகும் மனப்பாங்கு, விழுமிய எண்ணங்களும் செயற் பாடுகளும் இவரிடம் பரக்கக் காணலாம். அன்பர் சோதிலிங்கத்தில் சிறக்கக் காணலாம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்களிடமுள்ள அன்பும் பண்பும் அவரது வாழ்க்கையை உயரவைத்தது. அன்புள்ள மனைவி, பாசமுள்ள பிள்ளைகள், நல்ல பதவி, நல்ல வாழ்க்கைத்தரம், இவற்றைக் காணமுடியாத கூற்றுவன் எங்கள் சோதிலிங்கத்திடம் இருதய நோயாகப் புகுந்து நல்லுயிரைக்கவர்ந்து சென்றதைக் கேள்விப்பட்டு அன்பனும் நண்பனுமாகிய யான் அதிர்ச்சியுற்றேன்.

"பாயிற் படுக்காமல் பத்து நாள் செல்லாமல்
மாயக் கடதாசி மடிமேல் விழுந்ததென்ன " என்று ஏங்கலுற்றேன். என் செய்வது? நல்லவர்க்கும் வல்லவர்க்கும் பல்லாண்டு வாழ இப்புவி பொறுப்பதில்லையோ.? என்னவோ? விதி விளையாடிவிட்டது! அன்னாரின் பிரிவால் வாடும் அன்னாரின் பாரியார், பிள்ளைகள், அப்பா காட்டிய வழியில் அன்பைச் செலுத்திப் பாசத்தை வளர்த்து அறிவைப் பெற்றுப் புகழோடு வாழப் பன்னிருகை முருகன் அருள்பாலிக்க வேண்டும். என் குருநாதராகிய திருமுருககிருபானந்த வாரியார் அருள்வாக்காகிய அவனே படைத்தான்! அவனே அழைத்தான்! என்ற அருள் மொழியை நினைப்போம்! அவனடி தொழுவோர்! அமைதி பெறுவோர்! அன்பர் சோதிலிங்கத்தின் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல என்குலதெய்வமாகிய பறாளைமுருகனைப் பிரார்த்திக்கின்றேன்.

சுழிபுரம்

நடேசன் சிவசண்முகமூர்த்தி
B.A.Dip in Ed. (ஆசிரிய ஆலோசகர்)
வலிகாமம் கல்விவலயம்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

– வள்ளுவர் வாக்கு –

இன்பத்தைக் கண்டு குதூகலிக்கும் நாம் எப்போதும் துன்பத்தைக் கண்டு துவண்டுவிடுகின்றோம். பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, இறப்பு இவை அனைத்தும் இயற்கையின் நியதி.

திருவாளர் வைத்திலிங்கம் சோதிலிங்கம் அவர்கள் தமது அன்புப் பெற்றோர் பாசத்துடன் இட்ட பெயரிற்கேற்ப வாழ்ந்தவர். யாமறிந்த காலத்தில் இவர் பொறுப்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றைப் பேணிய நன் மனிதராக விளங்கினார். இவர் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதற்கேற்ப யாம் எந்த நேரத்தில் எந்த உதவி கேட்டாலும் மறுக்காது புன்முறுவலுடன் உதவி செய்யும் சிறந்த சுபாவம் உடையவராகவும் காணப்பட்டார்.

இவர் எங்கள் சங்கத்தின் கிளையின் அங்குரார்ப்பண அங்கத்தவராகவும் நிர்வாக சபை உறுப்பினராகவும் அமரத்துவம் அடையும்வரை செயலாற்றினார். இவர் உற்சாகத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் கடமையாற்றி அனைவரதும் அன்பையும் மதிப்பையும் பெற்றார்.

அவரைப்பிரிந்து துயருறும் அன்புத் துணைவியார் பாசமிகு பிள்ளைகள் அனைவருக்கும் ஆறுதல் கூறுவதுடன் மனஅமைதியை அவர்கள் பெற வேண்டுமென எல்லாம் வல்லவதிரன் புலோ சித்தி விநாயகரையும் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமியையும் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக!

மு.சிவபாலன்.

யா/மூளாய் சைவப்பிரசாச வித்தியாசாலை
பழைய மாணவர் சங்கம்
கொழும்பு.

Condolence From Colombo

We wish to extend our sympathies in the death of Mr. V. Sothilingam who worked with us for a period of approximately 15 or 16 years.

He started with us as a Clerical man and a Supervisor and before he left us on his own accord, he was a Manager and got actively involved in work in the farm and the farm shops, Virtually supervising all the farm shops. He also worked as a Personal Assistant to me.

He left on his own accord and continued to have cordial. relations with us.

We are extremely sorry to hear about his death
We wish his wife and two children all the best.

Hilary Fernando
Christombo Farm
Colombo.



"சோதியில் உருவாய் சோதிலிங்கம்"

உலகில் வாழும் சீவராசியின் இரு கூறாக உடல் வேறு, உயிர் வேறு வேறாகப்படைத்திருப்பதை "திருமந்திரம்" அழகாக விளக்குகின்றது. சடப்பொருளான உடல் அழிந்து அற்றுப்போகும் தன்மையுடையது. சூக்குமப் பொருளாகிய உயிர் அழியாத மெய்பொருள் ஆகும்.

உயிரானது தன் முற்பிறப்பின் வினைப்பயன்படி தாயின் கருவில் உருவாகி உடம்பைப் படைத்து உலகில் பிறக்கும் எமது உடம்புள் இயங்கி நடமாடச் செய்யும் உயிர். குறித்த காலத்தில், நாம் வாழ்ந்த வாழ்க்கை, பிறந்த பலனை அடைய உதவுகின்றது.

இதன் வழியில் "சோதியில் உருவாய் சோதிலிங்கம்" திருவள்ளுவரின் திருவாக்குப்படி

"தவம் செய்வார், தன் கருமம்செய்வார் – மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட்பட்டு"

இறைபணிக்கு ஆற்றிய சேவை. மனித குலத்துக்கும் தனது ஆன்மா ஈடேற்றத்திற்கும் பணிக்கேயான, விசுவாசமான கடமை உணர்வு எம் மனத்திலெல்லாம் இவர் நினைவு "சோதியில் சோதிலிங்கமாய்" சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. இப்பெருமகனார் சைவ நெறியும் தமிழும் மேலோங்கி வளர்ந்து நீர்வளமும் நிலவளமும் அருகருகே இருந்து சீர்செறிந்த வலிகாமம் மேற்குப் பதியில் மூளாய் என்னும் புண்ணிய பூமியில் சிறுபராயம் முதல் வளர்ந்தார். "வந்தாரை வாழவைத்த மலேசியா நாட்டில்" அவதரித்த போதும்

இத்திருநாட்டில் கல்விகற்று இலங்கையில் தலைநகரான கொழும்பில் பலகாலம் தொழில் பார்த்து வந்தார்.

உயர்ந்து நின்ற அந்தக் கம்பீரமான உருவமுடைய "சோதியில் சோதியான சோதிலிங்கம்." மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகரின் அடியானாக நல்லாசானாக ஆலய வளர்ச்சிக்குப் பெரிதும் சேவையாற்றி, இவ்வாலயத்தில் ஓர் சிறந்த பரிபாலனசபை அமைய வேண்டுமென்று இரவு பகலாய் பாடுபட்ட ஓர் உத்தம உயர்ந்த சோதியாவார். தன் தந்தை வழிவழியாய் செய்து வந்த ஆலய வாகனசாலைத் திருப்பணியைத் தவறாது செய்து வந்தார். அத்துடன் அல்லாமல் மார்கழி மாதந்தோறும் ஆண்டவனுக்குப் பூவெடுக்க "ஆலயத் திருநந்தவனம்" பராமரிக்கும். ஓர் உபயகாரராவார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

"சித்தி விநாயகர் கருணை மகத்தானது"

க.செல்வராசா

செயலாளர்

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்

தேவஸ்தான பரிபாலனசபை.



இறப்பு அளப்பரியது

அமரர் திரு. சோதிலிங்கம் மறைந்த செய்திகேட்டு அதிர்ச்சியுற்றேன். தன் குடும்பத்துடன் விடுமுறையை இன்பமாக களிக்க சொந்த ஊருக்கு வந்தவேளை காலன் வெகு சீக்கிரத்தில் அவர் ஆவியைக் கவர்ந்தது எல்லோருக்கும் பேரதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் தந்துள்ளது. அவரின் அளப்பரிய சேவையையும் ஆலய வளர்ச்சிக்கு எடுத்த முயற்சிகளையும் கிராம மக்கள் மூலம் அறியவந்துள்ளேன். அன்னாரின் இழப்பு குடும்பத்திற்கு மட்டுமல்ல மூளாய்க் கிராம மக்கள், நண்பர் எல்லோருக்கும் ஓர் பேரிழப்பு. இந்த இழப்பை ஒருபோதும் ஈடுசெய்யமுடியாது. துயருற்றிருக்கும் அனைவருக்கும் எனது குடும்பத்தின் அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

ஹலக் விசுவநாதன்
ஓய்வுபெற்ற கடற்படைஅதிகாரி
வட்டுக்கோட்டை
21-07-2001

தொண்டின் தோழர் அமரத்துவம் அடைந்த பண்பாளர் திரு.வ.சோதிலிங்கம் அவர்கள்

உயரம் கூடிய மனிதர்களிடம் உயர்வான சிந்தனை உதயமாகின்றது என்பதுபோல வெள்ளை நிறத்திற்கேற்ப வெண்மையான மனதுள்ளவராகவும் வாழ்ந்தவர் வ.சோதிலிங்கம் அவர்கள். இவர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஓர் பழைய மாணவர் சங்கம் உருவாக வேண்டுமென அல்லும் பகலும் உழைத்து ஓர் பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கி அதற்கு ஓர் யாப்பும் அமைத்து நிர்வாகசபை உறுப்பினராகவும் இருந்து பெரும் தொண்டாற்றிய பெருமகனாவார். இவர் மட்டுமல்லாமல் இவருடைய குடும்பத்தையே எமது பாடசாலைக்கு அர்ப்பணித்தார்.

இவர் மனைவி எமது பாடசாலை அதிபர் அம்மா அவர்கள். எமது பாடசாலை சகலதுறையிலும் கல்வியிலும் சரிவிளையாட்டிலும் சரி முன்னிலையில் இருப்பதற்கு இவருடைய குடும்பம் தான் முக்கிய காரணம். இவருடைய மூத்த மகன் ஜனகன் எமது சங்கத்தின் முன்னாள் பொருளாளரும் ஆவார்.

அதிபர் அம்மா அவர்கள் எந்தக் கருமத்தைச் செய்யும் பொழுதும் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகரின் ஆசி பெற்றுத்தான் செய்வார். அவரின் பக்தியை ஏற்ற விநாயகப் பெருமான் அவருடைய கணவரைச் சொந்த ஊராகிய மூளாய்க்கு அழைத்து தனது மனைவி பிள்ளைகள் உற்றார் உறவினர் நண்பர்களுடன் கூடிப்பேசிவிட்டுத் தான் வாழ்ந்த இடத்தைவிட்டுச் சொல்லாமற் கொள்ளாமல் ஊர் அமைதியான அதிகாலையில் தான் அமைதியடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயக முத்துக்குமாரசுவாமியைப் பிரார்த்திக் கின்றோம்.

க.பாலச்சந்திரன்
தலைவர்
பழையமாணவர்சங்கம்.
மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை.

உயர்சைவத் திருவாளர் சோதிலிங்கம் அவர்கள்.

உரும்பிராய்ப் பதியின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் வரிசையில் மிகவும் முன்னோடியாக விளங்கியவர் டாக்டர் வல்லிபுரம் அவர்களாவர். கல்வித் தொண்டாற்றிய திரு வல்லிபுரம் அவர்கள் சமயத் தொண்டிலும் ஈடுபட்டு ழைத்தார். உரும்பிராய் ஓடையம்பதி "கற்பக விநாயகர் பொற்பதம் பணிபவர் நற்கதி பெறுவர். " என்பது சான்றோர் உரை. குறித்த கற்பக விநாயகர் மகோற்சவங்களில் முதன்மை விழாவான கொடியேற்றத்திருவிழா நன்கு நடைபெற வழி வகுத்தவர் திரு.வல்லிபுரம் அவர்களே. திரு.வல்லிபுரம் அவர்களது திருக்குமாரரான திரு.செல்வநாயகம் தந்தையார் வழியால் கொடியேற்றத் திருவிழாவைச் சிறப்புற நடத்தி வந்தார். மலேசியா நாட்டில் இசைபட வாழ்ந்தவரான திருஇசெல்வநாயகம் அவர்களது இலங்கைப் பிரதிநிதி மூளாய் திரு. வயித்திலிங்கம் - சோதிலிங்கம் அவர்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. மூளாய்ப்பதி வதிரன்புலோ சித்தி விநாயகரையும் உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகரையும் இருகண்களைப் போல் போற்றிவந்தவர் திரு.சோதிலிங்கம் அவர்கள். உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் திருவாலயக் கொடியேற்ற விழாவின் உபயகாரராக இருந்து ஆற்றிய நற்பணி என்றும் நினைவு கூரத்தக்கது.

வைத்திலிங்கம் செல்லம்மா தம்பதியினர் தவமிருந்து பெற்றெடுத்த அருமைமகன் திரு.சோதிலிங்கம் அவர்கள் பெற்றோர்க்கு ஆற்றவேண்டிய கடமைகளை நன்கு செய்தார். "அற்லஸ்" சர்வதேச நிறுவனத்தின் பொறுப்பதிகாரியாகப்

பணிபுரிந்ததன்மூலம் நல்ல சேவையாளன் என்ற பெயரையும் பெற்றுக்கொண்டார்.

ஆசிரியர் உலகில் கொடி கட்டிப் பறந்தவர் தலைவர் திரு.த.சண்முகதாசன் அவர்கள். அன்னாரின் திருமகளான இரதிதேவியைத் திரு.சோதிலிங்கம் அவர்கள் திருமணம் புரிந்ததும் திருமதி ரதிதேவி சோதிலிங்கம் அம்மையார் புகழ்பூத்த மூளாய் சைவ்பபிரகாச வித்தியாசாலையில் அதி பராக அமர்ந்து கல்விப்பணியாற்றி வருவதும் இந்த நாடு பெற்ற பெரும்பேறுகள் எனலாம்.

இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து நாடு பயன்பெற நற்பணி ஆற்றவேண்டியவரான உயர்சைவத் திருவாளர் வயித்திலிங்கம் சோதிலிங்கம் அவர்களது திடீர்மறைவு ஏற்பட்ட பெருநட்டமாகும். அவரது ஆன்மா இறைவன் திருவடி களில் சாந்தியுறும் வண்ணம் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!

உரும்பிராய் **ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்.**



நன்றி நவிலல்

எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு என்றுமே நீங்காத நினைவுறுத்தி இவ்வுலக வாழ்வை நீக்கி இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடோடிவந்து அனுதாபம் தெரிவித்து உதவிகள் புரிந்து ஆறுதலளித்த அனைவருக்கும், மற்றும் நேரிலும், தொலைபேசியிலும், தபால் தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் சிறப்பாக இறுதிக் கிரியைகளில் பல்வேறு உதவிகள் புரிந்து அஞ்சலி செலுத்திய மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் **குறிப்பாக சாரணர்கள்** அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும், எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அதேசமயம் அந்தியேட்டிக் கிரியைகளிலும், இன்று நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மற்றும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இச் சுடரை அழகுற அமைக்க திதி வெண்பாவை ஆக்கித் தந்து உதவிய பண்டிதை பாக்கியம் அவர்களுக்கும் இரங்கற் செய்திகள் வழங்கிய அனைவருக்கும் கணனியில் அழகுற வடிவமைத்து தந்த பிள்ளையார் அச்சகத்தினருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

மனைவி, மக்கள்

பிள்ளையார் அச்சகம், 676, பருத்தித்துறைவீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்